Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 318 10.03.2001 சனிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

நகையா!
22 கரட்டில் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்
A.K.S ஜுவலர்ஸ்
பிரதான வீதி,
கல்வாஞ்சிகுடி

## வரவு செலவுத் திட்டம்

# மூன்று தமிழ்க் கட்சிகள் எதிராக வாக்களிக்க முடிவு!

(நமது நிருபா)

புதிய வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடும் போது மூன்று தமிழ்க்கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளன.தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் ஆகிய மூன்று தமிழ் கட்சிகளுமே எதிர்த்து வாக்களிக்கவுள்ளன. இது தொடர்பாக கட்சியின் பிரதிநிதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கருத்து தெரிவிக்கையில் அரசு பாதுகாப்பு வரியை ஒரு சதவீதத்தால் அதிகரித்துள்ளது.அத்துடன் போர் செலவினத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.இது ஒரு யுத்த வரவு செலவுத் திட்டம் என்பதைக் காட்டுகிறது. இந்த நிலையில் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தே வாக்களிக்கப் போவதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இந்த வரவு செலவுத் திட்டம் வடக்குக் கிழக்கில் துன்பப்படும் மக்களின் குறைகளைத் தீர்க்க வில்லை பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள மக்களுக்கு எந்த வித நிவாரணத்தையும் வரவு செலவுத் திட்டம் அளிக்கவில்லை இதனால் போர் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தே தீருவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ரெலோ முதல்வர் சிறிகாந்தா கருத்து தெரிவிக்கையில்

(8ம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்டத்தை ஐ.தே.கட்சி எதிர்க்கும்

**—ரணில்—**

(நமது நிருபர்)

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டுக்கான புதிய வரவு செலவுத் திட்டம் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்குகான ஒரு வரவு செலவுத் திட்டமாக அமையவில்லை என எதிர்க் கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு செலவுத்திட்டம் பற்றித் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் புதிய வரவு செலவுத்திட்டத்தில் பொருளாதார அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை இதனால் பொருளாதா ரம் வீழ்ச்சியடையுமே தவிர கட்டி எழுப்ப முடியாது.

இதே சமயம் ஒலி,ஒளிபரப்பு சேவை உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய அனுமதிக் கட்டணம் புதிய செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இது ஊடகத்துறையை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும்.

ஊடகங்கள் மூலம் உண்மையான தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்வார்கள் என்ற அச்சம் காரணமாகவும், மற்றும் சுதந்திர ஊடகங்கள் ஒழிக்க எடுத்த நடவடிக்கையாக இவை இருக்கலாம் என தெரிவிக்கப் படுகிறது. எனவே வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமான வாக்கெடுப்பில் ஐ.தே.கட்சி எதிர்த்து வாக்களிக்கும் எனத் தெரிவித்தார்.

## 'தினக்கதிர்' மேல் கோபமா அமைச்சர்கள் மீது வெறுப்பா?

தினக்கதிர் மட்டக்களப்பு நகரிலிருந்து வெளிவரும் கிழக்கிலங்கையின் முதல் தினசரிப் பத்திரிகை.

மிகக் குறுகிய காலத்தில் மக்கள் மனதில் இடம் பிடித்துள்ள பத்திரிகையும் தினக்கதிர் தான்.ஆனால் மட்டக்களப்பு அரசாங்க செயலகத்துக்கு தினக்கதிர் பத்திரிகை பற்றி தெரியாமல் இருப்பது தான் புரிந்து கொள்ள முடியவில்லை.

மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடுகளுக்குக் கூட யார் யாருக்கெல்லாமோ அழைப்பு தினக்கதிர் பத்திரிகைக்கு அனுப்பப்டுவதில்லை தினக்கதிர் பத்திரிகையை இந்த மகா நாடுகளுக்கு அழைப்பது இல்லை.

இன்று பத்தாம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு செயல கத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவிருக்கும் மட்டக்களப்பு அபிவிருத்தி சம்பந்தமான மகா நாட்டில் கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சரான திருமதி. பேரியல் அஷ்ரப் கலந்து கொள்ள விருப்பதாக தினக்கதிர் பத்திரிகையும் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் இந்த மகா நாட்டுக்கு தினக்கதிர் பத்திரிகைக்கு அரசாங்க அதிபரிடமிருந்தோ, செயலத்திலிருந்தோ அறிவிப்பு கிடைக்கவில்லை இதுவரை.

கடந்த மாதங்களிலும் அமைச்சர்கள் கலந்து கொண்ட மகா நாடுகளுக்கும் தினக்கதிர் அழைகக்கப்படவில்லை. செயலகத்துக்கு அமைச் சர்கள் மீது வெறுப்பா தினக்கதிர் மீது கோபமா? -ஆசிரியர்-

## பெல்ஜியம் முதலீடுகளை குறைக்கப் போவதாக தெரிவிப்பு!

(நமது நிருபர்)

பெல்ஜியம் நாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை குறைக்கப் போவதாக அறிவித்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சி, பொருட்கள் சேவைகள் அதிகரிப்பு, உள்நாட்டுப் போர் என்பனவே காரணமாக இருக்கலாம் என தெரிய வருகிறது.

இதே சமயம் கடந்த வருடம் பன்னிரெண்டாயிரத்து இருநூறு பெல்ஜியம் நாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கை வந்த போதும் தற்போது ஐயாயிரமாக குறைவடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கையில் பன்னிரெண்டு பெல்ஜிய நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புத்தர் சிலை தகர்ப்பை தடுத்து நிறுத்த பாகிஸ்தான் கோருகிறது இலங்கை

-செய்தி



இங்க கோயிலுக்கு குண்டு போட்டு அழிக்கிறவங்க அங்க தடுக்கப் போறாங்க எங்கம்மா அம்மா உங்கம்மா சும்மா............

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

ஆண்களுக்கு:-

- ஓட்டோ மெக்கானிக்
- ஓட்டோ எலக்ரீஷியன்
- ஓட்டோ பெயின்ரர்
- ஓட்டோ ரிங்கர்
- பாமர்
- பிளம்பர்

வேலைவாய்ப்புக்கள் உண்டு
மிக விரைவான பயணங்களுக்கு நாடுங்கள்
ங்குமிடம், மருத்துவம் இலவசம்
நியூ பாஹிம் என்டர் பிரைஸஸ்
LL No 736
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
காத்தான்குடியில் டிக்கட்டுகளுக்கு
151/1, 151/2 பிரதானவீதி
காத்தான்குடி-02
தொ.பே:065-47090,
ADVT

## கலாசார மண்டபதில் தினக்கதிரை தடுத்தது யார்?

(நமது நிருபர்)

அமைச்சராகப் பதவியேற்ற பின் பேரியல் அஷ்ரப் முதல் தடைவையாக நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

அமைச்சர் பேரியலின் மட்டக்களப்பு வருகையை அறிந்து கொண்டதும் அவரை தினக்கதிர் பத்திரிகைக்குப் பிரத்தியேகமாகப் பேட்டி கண்டு வெளியிடுவதற்கு, நமது அலுவலகப் பெண் பத்திரிகையாளர்கள் ஆவல் கொண்டனர். இதற்காக

நேற்று முன் தினம் வியாழ க்கிழமை பிற்பகல் முன்னாள் தபால் தந்தி பிரதி அமைச்சரும், இன்றைய தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபைத் தலைவருமான எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமைச்சரின் காத்தான்குடி வருகைப் பற்றி நமது பெண் செய்தியாளர் கேட்டார்.

அமைச்சரின் நிகழ்வுகள் பற்றித் தெரிவித்த அல்ஹாஜ் ஹிஸ்ப்புல்லா நாளை காங்கேயனோடையில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு பிற்பகல் 4.30க்கு காத்தான்குடி கலாசார மண்டபத்தில் நடக்கும் பெண்கள் கூட்டத்திற்கு வருவார் நீங்களும் கட்டாயம் வந்து கலந்து கொள்ளுங்கள் என்று அழைத்தார்.

அமைச்சரைப் பிரத்தியேகப் பேட்டி எடுப்பது பற்றி நமது செய்தியாளர் கேட்டதும் அவருக்கு நேரம் கிடைக்குமோ தெரியாது எதற்கும் சனிக்கிழமை காலை தொடர்பு கொள்ளுங்கள் என்று சொன்னார். நமது செய்தியாளர் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தார்.

இதன்பின் நேற்று மாலை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்துக்கு பெண்கள் கலந்து கொள்ளும் கூட்டத்துக்கு நமது பெண் செய்தியாளர்கள் சென்றனர். பாதுகாப்பு சோதனைகள் முடிந்ததும் ஆசனங்களில் போய் அமர்ந்தனர்.இதன் பின் இருவரையும் முன்புறம் அழைத்தவர்கள் பெண் பொலிஸகாரரும் மற்றும் இருவரும் ஹிஸ் புல்லாவிடம் இருந்து கார்டு கொண்டு வந்தீர்களா என்று கேட்டு இல்லை என்றதும் இவர்களுடைய பத்திரிகையாளர் அடையாள அட்டையை வாங்கி உள்ளே எடுத்துச் சென்று பின்னர் திரும்பி உள்ளே விட வேண்டாம் என்று ஹிஸ் புல்லா சொன்னதாக சொல்லி மண்டபத் துக்கு வெளியே

(8ம் பக்கம் பார்க்க)

பொது மக்களுக்கு ஓர் அறிவித்தல்

மட்டக்களப்பு ஆட்டோ சாரதிகள் சங்கத்தின் வருடாந்தப் பொது அமர்வு இன்று 10-03-2001 சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளதால் பிற்பகல் ஒரு மணியிலிருந்து ஆட்டோக்கள் சேவையில் ஈடுபடமாட்டாது என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
ஆட்டோசாரதிகள்
சங்கம்
மட்டக்களப்பு.
advt

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk

# முடிவு எங்கே?

போர் நிறுத்தப்பட வேண்டும், நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும். இவை நிகழ்ந்தால்தான் நாடு பொருளாதாரத் தில் அபிவிருத்தியடையும்.

சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏழாவது வரவு செலவுத் திட்டமான புதிய அரசின் முதலாவதுமான வரவு செலவுத் திட்டத்தை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிய பிரதி நிதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கின்றார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை நோர்வே நாடு அர்ப் பணிப்போடு செய்துவருகிறது.

இதேசமயம் இன்னும் இரண்டு மாதங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கும் என்று ஜனாதிபதி சந்திரிகாவும் தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் பிரதம மந்திரியோ இன்னும் ஏழாயிரம் இளைஞர்கள் படையில் சேர்ந்தால் போர்மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வரமுடியுமென்று கூறுகிறார்.

சிஹல உறுமயவும் ஆன்மீகத் தலைவர்களுமான மடாதி பதிகள் சிலரும் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகை களும் போர் மூலமே நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வரமு டியும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இவ் வருட வரவுசெலவுத் திட்டமும் கூட போரை முன் னெடுத்துச் செல்வதற்கான திட்டமாகத் தெரிகின்றதே தவிர சமா தானத்துக்கான திறவு கோலுக்கான அறிகுறியே தென்படவில் லை.

பாதுகாப்பு வரி மேலும் ஒரு சதவீதத்தினால் அதிகரிக் கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பில்லாத மக்களும் இந்த வரியைச் செலுத்தித்தானாக வேண்டும்.

இவ் வருடம் பாதுகாப்புச் செலவினங்களுக்காக 7600 கோடி ரூபாய் ஆகக் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது முழு வரவுசெலவுத் திட்டத்தினும் ஐந்தில் ஒரு பங்காகும்.

துண்டு விழும் தொகையை நிரப்புவதற்கு வரிகளை அதி கரித்திருப்பதுடன்குதிரைப்பந்தையச் சூதாட்டம் கிளப்புகளில் நடைபெறும் சூதாட்டங்கள் சட்டப்படி நடைபெறுவதற்கு அனு மதியளிக்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

தேசிய லொத்தர் சீட்டிழுப்பையும் தனியார் மயப்படுத்தப் போவதாகவும் நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார்குதிரைப் பந்தயத்தை ஒழித்துக் கட்டிய த்ர்மதுவீப நாட்டில் இனி சூதாட் டங்களும் வெளிநாடுகளில் நடைபெறும் குதிரைப் பந்தயங்க ளுக்கு இங்கே பணம் கட்டிப் பந்தயம் நடத்துவதும் இனிக்குடி சைக் கைத்தொழில்களானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கடந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 6300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பின்னர் 8000 கோடி ரூபாயாக உயர்ந்திருந்தது.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு 6300 கோடி ரூபாய் செலவாகுமென கடந்த மாதத்தில்தான் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இரண்டு வாரங்களில் இதை 7600 கோடி ரூபாயாகத் திருத்தியிருக்கிறார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 4.6 வீதமாகக் குறையுமென்றும் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

நாடு இப்பொழுதே பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச் சியடைந்து அல்லல்படுகிறது. புலிப் பூச்சாண்டியைக் காட்டி இன் னும் எத்தனை காலத்துக்குத்தான் சமாளிக்க முடியும்?

1983 ஆம் ஆண்டு நாட்டையே அழிவின் விழிம்புக்குக் கொண்டு போன இனக் கலகத்தின் பின் ஜே. ஆரின் அரசில் நிதி அமைச்சராக இருந்த ரொனி டிமெல் வரவு- செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையில்,

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு சமாதானம் ஏற்பட்டாலே நாட்டை முன்னேற்ற முடியும் என்று கூறியிருந்தார்.

ரொனிடிமெல் இப்பொழுது யு.என்.பி.யிலிருந்து வெளியேறி மீண்டும் சுதந்திரக் கட்சிக் கூடாரத்துக்குள் வந்தும் விட்டார்.

ஆனாலும், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் இன்னமும் இழுத்தடிக் கப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன.

இவ்வருடமும் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பேசுகையில் நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைய வேண்டுமானால் போர் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டும் என்று கூறியி ருக்கிறார் செயலில் எதையும் காணோம்!

இது கீறல் விழுந்த இசைத் தட்டு மாதிரி ஒவ்வொரு வரவு செலவுத் திட்ட உரையின் போதும் சொல்லும் ஒரு வாசகமாகிவிட்டது.

சமாதானத்துக்கான முயற்சி காணவே நாட்டின் முன்னேற்றத்துக்கான ஆர்வமோ ஆட்சியாயர்களிடத்தில் காணப்படவில்லையே. போரை முன் எடுத்துச் செல்வதற்கே பணத்தைக் கொட்டுகிறார்கள் முடிவு எங்கே

# ''பாஸ் நடைமுறை எந்தவொரு சட்டத்திற்கும் உட்பட்டதல்ல''

## நீதவான் எம்.இளஞ்செழியன்

(வவுனியா)

வதிவிட அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக வரிசையில் மணித்தியாலக்கணக் காக பொது மக்கள் காத்திருக்க வேண்டியிருப்பது சாதாரண காட்சியாகும். வவுனியாவில் உள்ள ரயில் நிலையம், ஈரப்பெரிய குளம் சோதனைச் சாவடி, பி.பி.ஆர் என அழைக்கப்படும் பொலிஸ் பொதுமக்கள் உறவு அலுவலகம், பிறவுண் நிலையத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஆகிய வற்றில் பல, மணித்தியாலங்கள் பொது மக்கள் இவ்வாறு வரிசையில் நிற்பது, அலைக்கழிக்கப்படுவது அத்துடன் அவர்களை சிலவேளைகளில் பொலிசார் ஆத்திரமுற்று பேசி கலைப்பது, அதனால் மனம் பாதிப்புறும் நிலைமை என்பன பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வதை நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் இடம் பெற்ற சந்திப்பின் போது வவுனியாவில் அமுலில் உள்ள பாஸ் நடைமுறை எந்தவொரு சட்டத்திற்கும் உட்பட்டதல்ல இருப்பினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இது வழங்கப்படுவதாக கூறப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டிய நீதிபதி 'இதனால் பலர் பாதிக்கப்படுகின்றபோதிலும் இது தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எவருமே வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதையும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இருந்த போதிலும் இந்த அனுமதிப் பத்திர நடைமுறையில் திருத்தம் செய்தார்கள், பிழையான தகவல்களை வழங்கி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளார்கள், அனுமதிப்பத்திரம் போலியாக தயாரித்தார்கள் என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி வவுனியா நீதிமன்றத்தில் பலருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டிய நீதிபதி இவ்வாறான இந்த பாஸ் நடைமுறை பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டி இவற்றில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என ஆலோசனை தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து உடனடியாக வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்றவர்களுக்கு ஒருநாள் பாஸ் வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டு 7 நாள் பாஸ் வழங்கும் நடைமுறையும், அதேநேரத்தில் 3மாதப்பாஸ் இப்போது வழங்கப்படுகின்றவர்களுக்கு 6மாதபாஸ் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரத்தில் அவசரமாக கொழும்பு செல்பவர்களுக்கு விசேட பரிசீலனையின் கீழ் அவர்களுக்கு தாமதம் இன்றி பிரயாணப்பாஸ் அனுமதி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நீதிமன்ற நிர்வாகம் வவுனியாவில் சுதந்திரமாக செயற்பட வேண்டும் எனவும் நீதிமன்ற உத்தியோகதர்கள் தமது கடமை நேரங்களில் பாஸ் பெறுவதற்காக பொலிஸ் நிலையங்களிலும் பாஸ் வழங்கும் இடங்களிலும் போய் நின்று அலைக்கழிவதை நிறுத்துமாறும் அதாவது கடமை நேரத்தில் அதிகாரிகள் அவ்வாறு வெளியே சென்று அலைக்கழிவதை நீதிமன்றம் அனுமதிக்கமாட்டாது என்றும் வவுனியா மாவட்ட நீதிபதி வவுனியா பொலிஸ் அத்தியட்சகருக்கு முன்னதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இந்த நீதிநிர்வாகம் சரியான முறையில் இயங்குவதற்காக இவ்வாறான அலைக்கழிவு இல்லாமல் அதிகாரிகள் முறையாக செயற்பட வேண்டும் என்பதையும் அவர்சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேநேரத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள நீதி நிர்வாகத்துக்கு பொறுப்பான வவுனியா மாவட்ட நீதிபதியின் வடமாகாண நீதி நிர்வாகத்தின் தலைமையதிகாரியாகிய மேல் நீதிமன்ற நீதிபதியின் கீழ் கடமை செய்கின்ற அதிகாரிகளுக்கும் உடனடியாக நிரந்தரப் பாஸ் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நீதி நிர்வாக நடைமுறைகள் நடைபெற வேண்டும், அதனுடைய தனித்துவம் பேணப்பட வேண்டும், அதேநேரத்தில் அதனுடைய கௌரவம் மதிக்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இராணுவ அதிகாரிகள் உடனடியாக வவுனியா நீதிமன்ற வளவிற்கு சென்று நீதிமன்ற அலுவலகர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் நிரந்தர பாஸ் வழங்கியிருக்கின்றார்கள். அத்துடன் இந்த அதிகாரிகளுக்கு நீதிமன்றங்கள் பொறுப்பாக இருக்கின்றது போலவே அவர்களுடைய குடும்பங்களை சேர்ந்த அதிகாரிகள் என்ற காரணத்தை ஏற்று அவருடைய குடும்பத்தினருக்கு சீ.சீ.ரி.எம்.எஸ் பாடசாலையில் வைத்து அண்மையில் நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

# பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள புறத்தடைகள் நீங்குவதற்கு யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்!

உலகின் சரிபாதியினராய் விளங்கும் பெண்களாகிய எம்மீது திணிக்கப்படும் அடக்குமுறைகள், சுமைகளினால் உறைந்து போயிருக்கும் நாங்கள் மீண்டும் உயிர்ப்படைய விரும்புகின்றோம். எம்மை அழுத்தும் புறத்தடைகளை உடைத்து விடுதலையாகி ஆளுமைச் செழிப்பு மிகுந்த வலிமையுள்ள மானிடர்களாய் வாழவே நாங்கள் ஆசைப்படுகின்றோம். எம்மீது சுமத்தப்பட்டுள்ள புறத்தடைகள் நீங்குவதற்கு இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். ஆகவே, எம்மீது கரிசனை காட்ட விரும்பும் சர்வதேச சமூகம் இதற்காக இன்றுள்ள சமாதான சூழலைப் பயன்படுத்த வேண்டுமென்று கோருகின்றோம். இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, வவுனியாவைச் சேர்ந்த சர்வதேச பெண்கள் தின ஒருங்கமைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

உலகப் பெண்கள் அனைவரும் தம்மீது, பெண்கள் என்ற முறையில் திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளுக்கெதிராக குரல் கொடுத்து, உலகப் பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து கைகோர்த்து அணிதிரண்டு போராடும் நாளே சர்வதேச பெண்கள் தினம் ஆகும்.



உலகெங்கும் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் சர்வதேசமெங்கும் பல்வேறுபட்ட வடிவங்களில் வியாபித்துள்ளன. இந்த அடிப்படையில் இலங்கையிலும் வெவ்வேறு மட்டங்களில மேற்கொள்ளப்படுகின்ற பெண்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக போராடுபவர்களுடன் எங்கள் கரங்களையும் இணைத்துக் கொள்கிறோம். குறிப்பாக வவுனியாவில் வாழும் தமிழ் பேசும் பெண்கள் மீது திணிக்கப்படும் விசேடமான அடக்குமுறைகளுக்கெதிராக எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

யுத்தத்தைக் காரணம் காட்டி நடைபெறும் கெடுபிடிகளால் வவுனியாவில் வாழும் தமிழ் பேசும் பெண்களின் அன்றாட வாழ்வில் கற்பனைக் கெட்டாத அளவுக்கு அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. குறிப்பாக இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் வாழும் பெண்களின் நிலைமை மிகவும் மோசமானது. வதிவிட அனுமதிப்பத்திரம் எனும் போர்வையில் வழங்கப்படும் திறந்த வெளிச்சிறைச்சாலை ஒன்றுக்கான பற்றுச்சீட்டுகள் ஆண், பெண் இரு பாலாருக்கும் பொதுவானவை. எனினும் பெண்கள் மீது இதன் அழுத்தங்கள் மிக அதிகமானவை.

(5ம் பக்கம் பார்க்க...)

# செவிப்புலனற்றோர் விளையாட்டுத்துறையில் திறைமைசாலிகளே

(அலுவலக நிருபர் ஜெகதீஸ்வரன்)

மன்னனுக்கு நாட்டில் மட்டுமே சிறப்பு. ஆனால் கற்றவனுக்கு நாடுமுழுவதிலு சிறப்பு செவிப்புலனற்ற பாடசாலையானது ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடு அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. 1999 ஆண்டு மே மாதம் வை.எம்.சி.ஏ செவிப்புலனற்ற பாடசாலை மாணவர்களின் விளையாட்டுக்களை பார்க்கும் போது ஏனைய மாணவர்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல. செவிப்புலன் பெரிய குறையல்ல. சாதாரண மாணவர்களைவிட அதிக திறமைகள் இவர்களிடம் உண்டு என்றார். வை.எம்.சி.ஏ யைச் சேர்ந்த வீ.டி. ஜெபராஜசிங்கம் தெரிவித்தார்.

நேற்று மலை மட்டு இந்துக்கல்லூரி மைதானத்தில் செவிப்புலனற்ற பாடசாலை மாணவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட் மட்டக்களப்பு மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் பேசுகையில் மனிதன் பல ஆற்றலோடு பிறக்கின்றான். ஆனால் வாழ் நாளில் சில நேரங்களில் இவ்வாறன ஆற்றல்களை இழக்க வேண்டி ஏற்படலாம். அதனால் நீண்ட காலத்தில் கஷ்டப் படுவதனையும் அவதானிக்கலாம்.

பிறப்பின் காரணமாக சில அவயவங்களை இழந்தாலும் அந்தக்குறையை விட பெரியதொருகுறையை பார்க்கும் போது அவயவங்களை இழந்து பிறப்பது பெரிய குறையல்ல.

கல்வித்துறை சார்ந் தோர், வை.எம்.சி.ஏ உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்ட இவ்விளையாட்டு விழாவில் பிரதம, கெளரவ, சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டவர்கள் பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்கள்.

# ரோட்டரக்ட் தொழு நோயாளர்களுக்கு அன்பளிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாந்தீவு தொழு நோயாளர் வைத்திய சாலையை மட்டக்களப்பு ரோட் டரக்ட் கிளைத்தலைவர் டேவிட் தலைமையிலான குழுவினர் இம்மாதம் 6ம் திகதி சென்று பார்வையிட்டனர்.

அதே சமயம் சுமார் 6500 ரூபா பெறுமதியான நோயாளர் களுக்குரிய பொருட்களையும் வ்ழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

பற்பசை, பற்தூரிகை, பிஸ்கட், சோப் வகைகள் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன.

இங்கு மூவினத்தையும் சேர்ந்த 30 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# மகிழடித்தீவு பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

(நமது நிருபர்)

மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையாலும், கட்டட வசதிகள் இன்றியும் மாணவர்கள் கஷ்டத்திற்குள்ளாகயுள்ளனர். இங்கு ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக ஒரு ஆசிரியரே எல்லா வகுப்பிற்கும் ஆங்கிலம் புகட்ட வேண்டியுள்ளது. இதைவிட மாணவர்களுக்கு போதிய இடவசதிகள் இல்லாமையினால் வெளியில் இருந்து கல்வி கற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதையிட்டு இப்பாடசாலை அதிபர் பலமுறை சம்பந்தப்பட்டவர்களுக்கு சுட்டிக்காட்டியும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கருத்தில் கொண்டு இப்பாடசாலையின் குறைகளை தீர்க்க வேண்டும் என இப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு கல்வி வலய அதிபர்கள் கூட்டம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு கல்வி வலய அதிபர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் இந்துக் கல்லூரியில் வா.புவிராசசிங்கம் அதிபர் தலைமையில் கூடியது. இக் கூட்டத்திற்கு மட்டக்களப்பு வலயத்தின் ஆறு கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள் சமூகம் கொடுத்தனர். இச் சங்கத்தின் ஏற்பாட்டுக் குழுவாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மண்முனை வடக்கு
எம்.இராசரெத்தினம்.
ச. தர்மராஜா
மண்முனை மேற்கு
சீ.எம்.குமாரசாமி
எஸ்.முருகேசபிள்ளை
மண்முனைப்பற்று
மூ.அருளம்பலம்
கு.வன்னியசிங்கம்
காத்தான்குடி
ம.ஃறுக் கரீம்
உதுமான் சாஹிப்
ஏறாவூர்ப் பற்று
சீவரெட்ணம்
ஞானேஸ்வரன்
ஏறாவூர் நகர்
சுந்தரராஜன்
ஐ.எஸ்.இஸ்ஸதீன்

மேலும் இச் சங்கமானது கல்குடா வலயம் களுவாஞ்சிக்குடி வலய அதிபர் சங்கங்கள் ஒன்றிணைந்து மாவட்ட அதிபர்கள் சங்கம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி கற்றல் கற்பித்தல் தொடர்பான விடயங்களில் ஈடுபடச் செய்யப்பட வேண்டும் எனவும் எதிர்கால சமூக மேம்பாடுகளில் தட்டிக் கேட்கும் சங்கமாகவும் அமைய வேண்டும் எனவும் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.



மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு ஆரையம்பதி வடக்கு காந்தி இளைஞர் கழகமும், ஆரையம்பதி இளம் தென்றல் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஸ்ரீ சித்திவினாயகர் ஆலய முன்றலில் நடாத்திய கலைநிழ்ச்சியின் ஒரு பகுதியைப் படத்தில் காண்க.

# விளையாட்டுப் போட்டிகள் ஒற்றுமை பொறுமையை வளர்க்கும்

(ஓட்டமாவடி நிருபர்)

பாடசாலை மட்டத்தில் தயாரிக்கப்படுகின்ற வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களில் விளையாட்டுப் போட்டிக்கு முக்கியத் துவமளித்து இதன் மூலம் உடல் ஆரோக்கியமும், உள ஆரோக்கியமுள்ள மாணவர் சமூகம் ஒன்றினை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் இப் போட்டி நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.

இவ்வாறு கல்குடா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஜெய்னுதீன் தெரிவித்தார்.

மட்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் செல்வி.நீ. லோகநாயகி தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டு நிகழ்ச்சிகள் முன்னாள் அதிபரும், பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் நிமலன் செளந்தர நாயகத்தின் நினைவாக மெளன அஞ்சலியுடன் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஒற்றுமை, குழு ஒத்துழைப்பு, பொறுமை, சகிப்புத் தன்மை, தலைமைத்துவ பண்பு போன்ற நற்பண்புகள் விளையாட்டின் மூலமாகவே உருவாக்கப்படுகின்றன என்றார்.

இந் நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி என்.ராஜரட்ணம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மீன்பிடி அமைச்சின் அனைத்து செயற்பாடுகளும் தனிச் சிங்கள மொழியில் மட்டும்

(ஜெகதீஸ்வரன்)

மீன்பிடி நீரியல் வளத் துறை அமைச்சின் சகல அலுவலக நடவடிக்கைகளும் தனிச் சிங்கள மொழியில் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடி அமைச்சரவையின் கீழ் இயங்கும் இலங்கை மீன்பிடிபயிற்சி பாடசாலைகள், மீன்பிடிக் கூட்டுத்தாபனம் அனைத்து நிர்வாக சேவை விடையங்களும் தலைமைக் காரியாலையத்தினால் தனி சிங்கள மொழியிலேயே இடம் பெற்று வருவதாக கூறப்படுகிறது.

அமைச்சினால் வழங்கப்படும் நியமனக்கடிதத்தில் இருந்து சுற்று நிருபங்கள் வரை தனிச் சிங்கள மொழியிலேயே வழங்கப்படுவதினால் சிங்கள மொழிதெரியாதவர்கள் இதனால் தொழில் ரீதியான பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடி நீரியல் வளத்துறை பிரதி அமைச்சராக மொஹிதீன் அப்துல் காதர் உள்ளதனால் இவ்விடயத்தில் கூடுதல் கவ னம் எடுத்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல மீன் பிடி அமைச்சரவைக்குக் கீழ் இயங்கும் கூட்டுத்தாபனங்களிலும் பயிற்சிப் பாடசாலைகளிலுமான சகல தொடர்புகளும் தமிழ் மொழியில் இடம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்மந்தப்பட்டவர்கள் அமைச்சரை கோரியுள்ளனர்.

# கிழக்குப் பல்கலைகழகம் முன் பள்ளி பயிற்சி நெறி

கிழக்குப் பல்கலைக் கழகம் முன் பள்ளி பருவ அபிவிருத்தியும் முன்பள்ளிக் கல்வியும் சான்றிதழ் பயிற்சி நெறியை நடாத்தவுள்ளது.

ஆறுமாதங்களுக்கான பயிற்சி நெறி யூன் மாதம் ஆரம்பமாகவுள்ளது. பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் மூன்று வருடம் கல்விகற்பித்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்றுஇருத்தல் வேண்டும்.

ஏப்ரல் மாதம் 30 ம் திகதிக்கு முன் விண்ணப்பிக் குமாறும் பாீட்சை மூலம் சித்தியடைவோருக்கு இந்த பயிற்சி நெறி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# பேடன் பவுல் விழாவும் நினைவு மலரும்

(முபா)

மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் சாரணிய ஸ்தாபகர் பேடன்பவுல் நினைவுதின விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது.

கல்முனைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.அலாவுதீன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சாரணர்களும், குருளைகளும், பெண்சாரணிய வழிகாட்டிகளும் பங்குபற்றிச் சிறப்பித்தன்ர்.

பிரதிக் கல்வி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மாவட்ட ஆணையாளர் யூ.எல்.ஹாசிம் உட்பட பலரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். இவ் வைபவத்தில் பேடன்பவல் நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# சம்பளப்பணம் கொள்ளை !

(நமது நிருபர்)

புசல்லாவைதல் பொடத்தோட்டம் தொழிலாளர்களின் சம்பளப்பணம் நேற்று பிற்பகல் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பளப்பணம் கொண்டு சென்ற வாகனத்தை முகமூடியணிந்திருந்த கொள்ளையர் கும்பல்ஒன்று துப்பாக்கிபிரயோகம் செய்து விட்டு அபகரித்து சென்றதாக தெரிய வருகிறது. இது தொடர்பாக பொலிசார் கொள்ளையர்களை தேடி வருகின்றனர்.

# நாளை வின்சன்ட் மகளிர் கனிஷ்ட பிரிவு விளையாட்டு விழா

(அரியம்)

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய கல்லூரியின் கனிஷ்ட பிரிவு மாணவிகளுக்கான் இல்ல விளையாட்டு விழா நாளைக் காலை 9.30 மணி தொடக்கம் மட்டுநகர் வெபர் அரங்கில் இடம்பெறும்.

வின்சன்ட் மகளிர் தேசிய கல்லூரியின் அதிபர் திருமதி.சுபா சக்கரவர்த்தியின் தலைமையில் இடம்பெறும் இவ் விளையாட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க.கதிர்காமநாதன், சிறப்பு அதிதிகளாக வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பொன்னம்பலம், உதவி வலயக்கல்விப்பணிப்பாளர்களான எஸ்.துரைராஜசிங்கம், எம்.குருகுலசிங்கம் ஆகியோரும் கெளரவ அதிதியாக உதவி வலய கல்விப் பணிப்பாளரான கே.பாஸ்கரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே வேளை இக்கல்லூரியின் சிரேஷ்ட பிரிவு மாணவர்களின் விளையாட்டு விழா அடுத்த வாரம் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதா – மூப்பனார் கூட்டணி அமைப்பு; பா.மா.க எதிர்ப்பை கைவிட்டு சேர்ந்தனர்

(சென்னை)

தமிழகம் புதுவைக்கு தனித் தனி கூட்டணி ஏற்படுத்தி கொள்வது என்று அ.தி.மு.க. - த.மா.கா. இடையே உடன்பாடு ஏற்பட்டு உள்ளது. புதுவையில் காங்கிரஸ் ஆட்சியை விட்டு கொடுக்க தயாராக இல்லை என்று கூறப்படுகிறது.

கூட்டணி குறித்து ஜெயலலிதாவும்-மூப்பனாரும் உடன்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள். அ.தி.மு.க.வுக்கு 144 தொகுதியும், மற்றகட்சிகளுக்கு 90 தொகுதிகளையும் விட்டு கொடுக்க ஜெ. முன் வந்து உள்ளார்.

தமிழ்நாட்டு கூட்டணியில் பா.ம.க. இருந்தாலும் பரவாயில்லை என்று த.மா.கா.வும்-காங்கிரசும் கூட்டணியில் சேர முன்வந்து இருக்கிறது. ஆனால் புதுவையில் அ.தி.மு.க.-பா.ம.க. வேட்பாளர்களை எதிர்த்து காங்கிரஸ்-த.மா.கா. வேட்பாளர்களை நிறுத்த முடிவு செய்து உள்ளது.

இந்த உடன்பாடு விவரம் வருமாறு:-

புதுவையில் பா.ம.க.-அ.தி.மு.க. தனித்து போட்டியிடும். அங்கு ஏற்கனவே 10 தொகுதி பா.ம.க.வுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளது. புதிய திட்டப்படி இப்போது அந்த கட்சிக்கு புதுவையில் 17 தொகுதி ஒதுக்கப்படுகிறது. அங்கு அ.தி.மு.க. 13 தொகுதிகளில் போட்டியிடும். அங்கு பா.ம.க.வுக்கு அதிகமாக கொடுக்கும் 7 தொகுதிக்கு பதில் தமிழகத்தில் பா.ம.க.வுக்கு ஒதுக்கிய 27 தொகுதியில் இருந்து 7 தொகுதியை அ.தி.மு. க.வுக்கு விட்டு கொடுக்க ராமதாஸ் முன் வந்து இருக்கிறார்.


### தொகுதி

அந்த 7 தொகுதியில் த.மா.கா.-காங்கிரசுக்கு 5 தொகுதி கொடுக்கப்படும் இதன் மூலம் அந்த கட்சிகளுக்கு கோட்டா 50 ஆக உயர்கிறது. கம்யூனிஸ்டுகளுக்கு 2 தொகுதியும் கொடுக்கப்படும். இதன் மூலம் கம்யூனிஸ்டு கோட்டா 14 ஆக உயர்கிறது. மீதி உள்ள 150 தொகுதியில் 6 தொகுதியை முஸ்லிம் லீக் உள்பட சில கட்சிகளுக்கு ஒதுக்கிவிட்டு 144 தொகுதியில் அ.தி.மு.க. போட்டியிட வேண்டும் என்று ஜெ. முடிவு செய்து இருக்கிறார்.

இந்த திட்டத்துக்கு மூப்பனாரும் ஒப்புதல் அளித்து விட்டார். இந்த கூட்டணி திட்டத்தை இன்று ஜெயலலிதா அறிவிக்கிறார். இன்று மாசி மகத்துடன், முழு பவுர்ணமி என்பதால் இந்த நாளை ஜெ. தேர்வு செய்து இருக்கிறார். இன்று அ.தி.மு.க. முதல் வேட்பாளர் பட்டியலையும் வெளியிடுகிறார்.

# காங்கிரஸ் தலைவர் பதவியை இளங்கோவன் ராஜினாமா

(சென்னை)



கூட்டணி விவகாரத்தில் ஏற்பட்ட மோதலில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் தனது ராஜினாமா கடிதத்தை டெல்லிக்கு அனுப்பி இருப்பதாக தெரியவந்துள்ளது.

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைப்பதில் த.மா.கா.வும், காங்கிரசும் குழப்பம் அடைந்து இருப்பது தெரிந்ததே. இந்த குழப்பத்துக்கு யார் காரணம் என்பதில் காங்கிரசுக்கும், த.மா.கா.வுக்கும் திடீர் மோதல் ஏற்பட்டு உள்ளது.


### இளங்கோவன் பலிகடா

இந்த குழப்பத்துக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் தன்னிச்சையாக பேட்டி கொடுப்பதும், 3-வது அணி பற்றி அடிக்கடி பேசுவதும்தான் காரணம் என்று காங்கிரஸ் மேலிடத்தில் 2 தமிழக காங்கிரஸ் எம்.பி.க்கள் புகார் கூறி உள்ளனர்.

இதையடுத்து காங்கிரஸ் மேலிடத்தில் இருந்து கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு இளங்கோவனிடம் விளக்கம் கேட்டனர். இதனால் அவர் மனம் வெதும்பி தனது ராஜினாமா கடிதத்தை நேற்று சோனியாவுக்கு அனுப்பிவிட்டதாக கூறப்படுகிறது.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி



குடந்தையில் நேற்று மாசி மக விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி மகா மக குளத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனித நீராடிய காட்சியை படத்தில் காணலாம்.

# கோவை குண்டு வெடிப்பு வழக்கில் பாட்சாவுடன்12 பேருக்கு சிறை

அல்-உம்மா தலைவர் பாட்சா உள்பட 13 பேருக்கு சிறை தண்டனை வழங்கி பூந்தமல்லி தனி நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கியது.

கோவையில் கடந்த 1998-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ந்தேதி அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதைத் தொடர்ந்து சென்னை அண்ணாசாலை காவல் நிலையம் அருகிலும், எழும்பூர் போலீஸ் கமிஷனர் அலுவலகம் அருகேயும் மறைத்தும், பதுக்கியும் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் போலீசார் கைப்பற்றினார்கள்.

இந்த சம்பவத்துக்கு பாட்சா தலைமையிலான அல்-உம்மா இயக்க தீவிரவாதிகளே காரணம் என்று கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து அல் உம்மா இயக்கத்துக்கு தமிழக அரசு தடை விதித்தது.

வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை பதுக்கி வைத்து இருந்ததாக பாட்சா உள்பட 13 பேர் மீது பூந்தமல்லி சிறப்பு கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நீதிபதி நாகராஜன் முன்னிலையில் நடந்துவந்தது.

அவர்களிடம் நீதிபதி நாகராஜன், நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்மானிக்கிறேன். தண்டனை பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், நாங்கள் அப்பாவிகள், எங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

இதைத்தொடர்ந்து நீதிபதி நாகராஜன், சென்னை அண்ணா சாலையில் 1998-ம் ஆண்டு நடந்த வெடிகுண்டு சம்பந்தபட்ட வழக்கில் போலீசாரால் கைது செய்யப்பட்ட அல் உம்மா இயக்க தலைவர் பாட்சா உள்பட 13 பேருக்கும் 4 வருட கடுங்காவல் தண்டனையும், தலா ரூபாய் 500 அபராதமும், அபராத தொகையை கட்ட தவறினால் மேலும் 1 மாதம் கூடுதல் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறினார்.

இந்த தீர்ப்பினை கேட்டவுடன் ஆத்திரம் அடைந்த பாட்சா உள்ளிட்ட 13 பேரும், நாங்கள் ஒன்றும் தெரியாத அப்பாவிகள். எங்களுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது அரசால் ஜோடிக்கப்பட்ட வழக்கு. எங்களை விடுதலை செய் என்று உரத்த குரலில் கோஷமிட்டனர். இதனால் நீதிமன்றத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# அதிசய வெளிநாட்டு ஆந்தை



கும்பகோணத்தை சேர்ந்தவர்கள் வளையாபதி (வயது 45). வெங்கடேஷ் (வயது 30). இவர்கள் இருவரும் நேற்று குடந்தை டவுன் மேல்நிலைப் பள்ளி சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது ஒரு ஆந்தை பறந்து வந்தது. அதை பார்த்த அவர்கள் இருவரும் அதனை பிடிக்க முயன்றனர். ஆனால் அது அங்கிருந்து தப்பி ஓடி ஒரு பஸ்சின் அடியில் போய் மாட்டிக்கொண்டது. இதற்கிடையில் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அந்த சமயத்தில் அவர்கள் இருவரும் முயற்சி செய்து அந்த ஆந்தையை பிடித்தனர்.

பிடிபட்ட ஆந்தை ஒரு அடி உயரமும், அது இறக்கையை விரித்தால் 21/2 அடி அகலமும் உள்ளது. இந்த ஆந்தை உணவுக்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் இங்கு வெளிநாட்டில் இருந்து வந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இது குறித்து குடந்தை வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டு அவர்களிடம் ஆந்தை ஒப்படைக்கப்பட்டது.

# ''போர் நிறுத்தம் அறிவித்த பின் தீவிரவாதிகள் ஊடுருவல் குறைவு''

(புதுடில்லி)

காஷ்மீரில் மத்திய அரசு போர்நிறுத்தம் அறிவித்த பின் தீவிரவாதிகளின் ஊடுருவல் குறைந்து உள்ளது. நவம்பர் 27-ந்தேதிக்கு முன்புள்ள 3 மாத காலகட்டத்தில் 54 முறை தீவிரவாதிகள் ஊடுருவினார்கள். தற்போது போர் நிறுத்தம் அறிவித்தபின் வெறும் 15 தடவைகள் மட்டுமே தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர்.

### கருத்து வேறுபாடா?

போர்நிறுத்தம் நீட்டிக்கப்படுவது தொடர்பாக அரசுக்கும், ராணுவத்துக்கும் இடையில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை.

காஷ்மீரில் தற்போது 2 ஆயிரம் முதல் 2500 தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். மேலும் 2 ஆயிரம் தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் ஊடுருவத்தயாராக பாகிஸ்தான் முகாம்களில் காத்திருக்கிறார்கள். இந்திய ராணுவத்தின் தீவிர கண்காணிப்பு காரணமாக தீவிரவாதிகள் ஊடுருவ முடியாத நிலை உள்ளது.

### தாக்குதல் அதிகரிப்பா?

காஷ்மீரில் போர்நிறுத்தம் அறிவித்த பின் தீவிரவாதிகள் தாக்குதல் அதிகரித்து விட்டதாக சிலர் கூறுகிறார்கள். வன் முறை மலிந்த காஷ்மீரில் வழக்கம் போல அதிகஅளவில் தாக்குதல்கள் நடந்துவருகிறது. போர் நிறுத்தத்துக்கு பிறகு தாக்குதல் அதிகரித்திருப்பதாக கூறுவது தவறு. போர்நிறுத் தத்துக்கு பிறகு நடந்த மோதல் களில் 185 பொதுமக்களும், 43 பாதுகாப்பு படை வீரர்களும் பலியாகி உள்ளனர். 191 தீவிர வாதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

# பாகிஸ்தானுக்கு சீனா அணு ஆயுத உதவி

(புதுடில்லி)

பாராளுமன்ற கேள்வி நேரத்தில் பாகிஸ்தானுக்கு சீனா அணுஆயுத உதவி அளிப்பது பற்றிய கேள்விக்கு, பதிலளித்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் பேசியதாவது:-

சீனா, பாகிஸ்தானுக்கு அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை தயாரிப்பு போன்றவற்றில் உதவி செய்து வருவது வழக்கமான ஒன்று. ஆனால் இது சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டே நடைபெறுகிறது. சமீபத்தில் சீன மக்கள் காங்கிரஸ் தலைவர் லீபெங் வருகையின் போது பல் வேறு மட்ட பேச்சு வார்த்தையில் இது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. ஐ.நா. சபையில் ஆசியா வின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை சீனா ஏற்றுக் கொண்டது. முதல்முறையாக இருநாடுகளின் மத்தியப்பகுதி வரைபடங்கள் மாற்றிக் கொள்ளப்பட்டது. மேலும் சுற்றுலா மற்றும் வான்வழி போக்குவரத்து ஆகியவற்றில் இந்தியாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கு சீனா ஆர்வம் தெரிவித்துள்ளது. இந்த சந்திப்பின் போது சீனா, அசாம் மற்றும் சிக்கிம் மாநில பிரச்சினை பற்றி ஏதும் குறிப்பிடாதது மிகவும் குறிப்பிடத்தக்கது.

# இறையன்பைத் தவிர உலகில் எதுவும் நிலையானது அல்ல

**-சுவாமி யுத்தாத்மானந்தா ஜீ -**

(காந்தன்)

இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு இறைவனை அடைய முடியுமா? என்ற கேள்விக் குப் பதிலளிப்பது போன்றே ஸ்ரீ இராமகிருஷ்ணரின் வாழ்க்கை அமைந்தது. அவர் திருமணமாகி இல்லறத்தில் இருந்தாலும் துறவியாகவே வாழ்ந்திருந்தார். ஒரு கையிலே மணலையும், மற்றைய கையிலே ஒரு நாணயத்தையும் வைத்துக் கொண்டு சொன்னார். இந்த இரண்டிலும் எதுவுமே நிலை யானது அல்ல. பணம் இன்று ஒருவரிடமும் நாளை இன்னு மொருவரிடமும் இருப்பது போல் தான் மணலும், என்ற தத்துவத தினை புரிய வைத்தவர்.டி நிலையானது இறைவனை




அடைய நாம் செய்யும் தூய்மை யான இறையன்பு மட்டுமே.

இவ்வாறு மட்டக்களப்பு ஆனைப்பந்தி இராம கிருஷ் மிஷன் பெண்கள் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற 166வது ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மைசூரில் இருந்து வருகை தந்த ஸ்ரீமத்.சுவாமி யுத்தாத்மானந்த ஜீ மகராஜ் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்து மதத்தினை மட்டும் கற்றுவிட்டு ஆன்மீகத்தில் இறங்கவில்லை. அனைத்து மதங்களையும் கற்று விட்டே துறவாழ்வில் ஈடுபட்டார். நாம் தண்ணீர் என்று கூறுவது போல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மொழியில் கூறுவது போல்தான் மதமும். இறைவன் ஒன்றுதான். அவனை நாம் அழைத்து வழிபடும் முறைகள் மாத்திரமே வேறாகும். நாம் இறைவனை அடைய தூய அன்பு, தியாகம், அர்ப்பணிப்புடன் ஆன்மீக வழிக ளில் ஈடுபட வேண்டும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பற்றி நீங்கள் அறிய வேண்டு மானால் அவரைப்பற்றிய புத்த கங்கள் வெளியிடப்பட்டுள்ளது. அதனை நீங்களும் கற்று அவர் போல் வாழாவிட்டாலும் நல்ல மனிதனாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இவ் வைபவத்தில் பஜ னைகளும், பல கலை நிகழ்ச்சி களும் ஆனைப்பந்தி இ.கி.மி. பெ.ம.வித்தியாலய மாணவிக ளால் நிகழ்த்தப்பட்டது விஷே அம்சமாகும்.



ஜெயந்தி விழாவில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளில் ஆனைப்பந்தி இ.கி.மி.பெ.ம வித்தியாலய மாணவிகள் பங்கு பற்றிய நடனக்காட்சியில் ஒரு தோற்றம்

# செய்திச்சுருக்கம்

## வவுனியாவில் 400 குடும்பங்கள் மீள் குடியேற்றம்

வவுனியா மாவட்டத் திற்குள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் 1300 குடும்பங்கள் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் குடியமர விருப்பம் தெரிவித்துள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இம்மாதம் 31ம் திகதி முன்னர் 400 குடும்பங்கள் குடியமர்த்தப் படவுள்ளன என மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித் தார்.

தொடரும் யுத்தம் காரணமாக இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேச வவுனியா மக்களும் அகதிகளாக நலன்புரி நிலையங்களில் பல ஆண்டு களாக வசித்து வருகின்றனர். அத்துடன் கனகராயன்குளம் நெடுங்கேணி பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர்கள்.

## 4 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

4 பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கி இறந்த சம்பவமொன்று களுதா வளைப் பகுதியில் நடைபெற் றுள்ளது. 43 வயதான கிருஷ் ணப்பிள்ளை இராஜரெட்னம் என்பவரே இவ்வாறு இறந்தவர் ஆவார்.

களுதாவளை முதலாம் குறிச்சியைச் சேர்ந்த இவர் மது அருந்தும் பழக்கமு டையவர், இவரின் மனைவி சுமார் 1 1/2 மாதங்களின் முன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தனது மனைவியின் சகோதரியின் கணவருடன் அடிக்கடி கைகலப்பில் ஈடுபடும் இவர் சுமார் ஒரு வாரத்தின் முன் இவ்வாறான கைகலப்பில் ஈடுபட்டுள்ளார்.

அதன் பின் காணாமல் போன இவர் சுருக்கிட்டு இறந்த நிலையில் கடற்கரையோரக் காட்டுப்புறத்தில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார். மரமொன்றில் தொங்கிய நிலையில் காணப்பட்ட இவரின் சடலம் மிருகங்களால் உண்ணப் பட்டு மிகவும் சிதைவடைந்த நிலையிலேயே கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## தள்ளாடி படைவீரர் தற்கொலை

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் கடந்த புதன்கிழமை இரவு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தள்ளாடி இராணுவ முகாமில் நீண்ட காலமாகப் பணியாற்றி வந்த லக்மினி பிரஹாஷ் என்ற இராணுவ வீரரே தற்கொலை செய்து கொண்டவராவர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை மன்னார் பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

## "தினக்கதிர்" ஓராண்டு நிறைவையொட்டி

### மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

கிழக்கிலங்கையில் இருந்து வெளிவரும் முதலாவதும், ஒரேயொரு நாளிதழுமான தினக்கதிர் பத்திரிகையின் ஒரு வருட நிறைவையொட்டி கல்வி திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான அறிவுத்திறனை ஊக்குவிக்கும் கட்டுரைப்போட்டி

**நிபந்தனைகள்:-**

தரம் 10 தொடக்கம் 13 வரையுள்ள மாணவர்கள் மட்டுமே பங்கு பற்றலாம்.

1500 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

கீழ் குறிப்பிடும் தலைப்புக்களில் ஒன்றை மட்டும் தெரிவு செய்து எழுதி அனுப்பவும். ஒரு மாணவர் ஒரு கட்டுரையை மட்டுமே அனுப்ப முடியும்.

**தலைப்புகள்:-**

1. சமூக மேம்பாட்டில் பத்திரிகையின் பங்கு
2. நான் ஒரு ஊடகவியலாளரானால்........
3. சமூகத்தில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பன செலுத்தும் தாக்கம்.
4. பூகோள மயமாதலும் பத்திரிகைகளின் பங்கும்

**பரிசில்கள்:-**

1ம் பரிசு :- 1000 ரூபா
2ம் பரிசு :- 500 ரூபா
3ம் பரிசு :- 300 ரூபா
மேலும் 10 ஆறுதல் பரிசில்களும், நற்சான்றிதழ்களும் வழங்கப்படும்

**முடிவுத்திகதி:-**

30.03.2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு
"ஓராண்டு நிறைவு கட்டுரைப்போட்டி"
'தினக்கதிர்'
த.பெ.இல.06
மட்டக்களப்பு
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

வெற்றியீட்டும் மாணவர்களின் விபரம் தினக்கதிரில் பிரசுரிக்கப்படும் வெற்றி பெறும் கட்டுரை தினக்கதிரில் வெளியிடப்படும்

எங்கே மாணவர்களே உங்கள் அறிவுத்திறனை காட்டி பரிசில்களை வெல்லுங்கள்.

❖❖❖❖

# பெண்கள் மீது.............................

2ம் பக்க தொடர்ச்சி)

வீதிக்கு வீதி சந்திக்குச் சந்தி வதிவிட அனுமதிப்பத்திரத்தைப் பரிசீலிக்கும் பொழுது பெண்கள் மீது புரியப்படும் பாலியல் ரீதியான சேட்டைகளும், வன்முறைகளும் இம்சைகளும் தன்மானமுள்ள எந்தப் பெண் ணாலும் ஏற்றுக் கொள்ள முடியாதவை. உள்ளத் தில் நெருப்போடும் உதட்டில் சிரிப்போடும் இந்தக் கொடுமை களை எதிர்கொள்ளும் குமுறும் நெஞ்சுகள் நிதமும் பொங்கிப் பொருமிக் கொண்டே இருக் கின்றன. பஸ்சில் பிரயாணிக்கும் பொழுது கூட பைத்தியம் பிடித்த வர்கள் போல் அடிக்கடி திடுக் குற்று அனுமதி அட்டையைத் தட விப் பார்த்துக் கொள்ளும் நிலை மைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சமூகத்தில் பெண்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வழமை யான மூடத்தனமான கட்டுப் பாடுகள், யுத்த பயம் காரணமாக பல மடங்கு அதிகரித்து வருகின்றன. இத்தகைய பயம் காரணமாகவே எமது சமூகம் பெண்களைச் சுதந்திரமாகத் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாதபடி தடுத்து வருகின்றது. இத்தகைய சூழல் காரணமாக நடைபெறும் கைதுகள், கொலை கள் போன்றவற்றால் கணவனை, பிள்ளைகளை, சகோதரர்களை இழந்தவர்களாக பல பெண்கள் இன்று நிர்க்கதியாக்கப்பட்டதுடன் அளவுக்கதிகமான சுமைகளைச் சுமக்க வேண்டிய அவலத்துக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

நலன்புரி நிலையம் என்ற போர்வையில் உள்ள அகதி முகாம்களில் நடைமுறைப்படுத் தப்படும் விதிகளும் அதையொட்டி வெளி இடங்களில் கொடுக் கப்படும் பல்வேறு நெருக்கடி களும் சிறுவயதிலேயே மணம் செய்து கொள்ளும் பெண்களின நிலையும் பாலியல் ரீதியாக சீரழிக்கப்படும் பெண்களின் நிலையும் பெண்களிடம் வளர வேண்டிய ஆளுமையைச் சிதை த்து வருகின்றன.

உலகின் சரிபாதி யினராய் விளங்கும் பெண்கள் மீது திணிக்கப்படும் அடக்கு முறைகளும் சுமைகளும் நீண்டு கொண்டிருக்கின்றன. இதனால் உறைந்து போயிருக்கும் பெண்கள் மீண்டும் உயிர்ப்படைய விரும்புகின்றார்கள். தங்களை அழுத்தும் புறத்தடைகளை உடைத்து அவற்றில் இருந்து விடுதலையாகி ஆளுமைச் செழிப்பு மிகுந்த வலிமை கொண்ட மானிடர்களாய் வாழவே அவர்கள் ஆசைப்படுகின்றார்கள். பெண்கள் மீதுள்ள புறத்தடைகள் நீங்க வேண்டுமாயின் எம்மீத திணிக்கப்பட்டுள்ள யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். ஆகவே பெண்கள் மீது கரிசனை காட்ட விரும்பும் சர்வதேச சமூகம் இன்றுள்ள சமாதான சூழலைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகின்றோம்.

- பெண்களாகிய நாம் பயமின்றிச் சுதந்திரமாக வாழ விரும்புகின றோம். - எமது சுயம் அங்கீகரிக் கப்பட வேண்டும். - எமது நியாயமான விருப்புகளை நிறைவு செய்யும் உரிமையை - எமது தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையை நாமே கொண்டி ருக்கக் கூடிய நிலைமையை உறுதி செய்யவே ஆசைப்படு கின்றோம்.

அவ்வாறாயின் - எமது ஆற்றல் வெளிப்பட்டு எமக்கும் உலகுக்கும் தெரியவரும் - புதிய அரிய பல கண்டுபிடிப்புகளைச் செய்து சாதனை படைக்க எம்மாலும் முடியும் - அழகான அமைதியான சூழல் ஒன்றைத் தோற்றுவிக்க எம்மாலும் முடியும். எனவே எமது பிரதேசமெங்கும் வாழும் அனைத்து மனிதரும் மனப்பயம் நீங்கி சுதந்திர வாழ்வு வாழும் அழகான அமைதியான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என கோருகின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று 1 மணிக்குப்பின் முச்சக்கரவண்டிகள் ஓடாது

(நமது நிருபர்)

முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 1மணிக்கு கூடவிருப்பதால் பி.ப 1மணிக்குப் பின்பு முச்சக்கரவண்டிகள் சவாரிகளுக்குச் செல்லமாட்டாது என்பதனை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித் துள்ளது.

# அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், சைப்பிரஸ், கௌதமாலா

## அயல் உலக அரசியல்

உலகம் எங்கும் இன்று தேசியவாதம் கேட்கின்றது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகள்



அம்மணி நீங்கள் நடந்து வரும்போது சுடர் மணி தான்! வாய்திறந்து பேச வெளிக்கிட்டால் தான் ஆசியரின் தொடை நடுங்குறது. படத்தில் காணப்படுபவரே பவுலின் கான்சன்

தான்! ஆயினும் அந்நாட்டுக்கு உரிய பூர்வீக மக்கள் தமது இறைமையை இப்போது இழந்துவிட்டார்கள். இந் நாடுகளில் இன்று குடியேறி வாழும் வெள்ளையர்கள் இப்போது தமது தேசிய நாடாக ஆக்கிக் கொண்டார்கள்.

இன்று ஆசியாவில் இருந்து அதிகளவாக மக்கள் அவுஸ்திரேலியாவிலும் குடியேறி இருக்கின்றார்கள். ஆனால் இந்த அனுமதி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையிட்டு ஊகங்கள் கூற முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. பவுலின், கன்சன் அம்மையாரின் ஒரு நாட்டினம் **(One Nation)** என்ற கொள்கையைக் கொண்ட கட்சி அரசியல் பெரும் வெற்றிகளைச் சுவீகரிக்கத் தொடங்கியுள்ளது. இக் கட்சியின் பிரதான

**அயல் உலக அரசியல் இனி சனிக்கிழமை தோறும் வெளிவரும்**

கொள்கை ஆசியர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறுவதைத் தடை செய்ய வேண்டும் என்பதே!

1998 ஆம் ஆண்டினில் இவர் தோல்வியைத் தழுவியிருந்தாலும், இவர் கட்சியின் அங்கத்தவர்கள் பலர் வெற்றியின் விளிம்புக்குச் சென்று பெரும் வெற்றியினை ஈட்டியுள்ளனர். 5 வருடங்களுக்கு முன்பு இவர் பாராளுமன்றத்தில் பேசியபோது ஆசிய நாட்டவர்களால் அவுஸ்திரேலியா அழிக்கப்பட்டு வருவதாகக் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது. என்றோ ஒரு நாள் இவர் அவுஸ்திரேலியாவின் ஆட்சியைக் கைப்பற்றுவார் என்றும் எதிர்வுகள் கூறப்படுகின்றன!

### பிலிப்பைன்ஸில் பிரிவினைக்கு எதிரான அணுகுமுறைகள்!

உலகில் தேசிய இனங்களின் எழுச்சி காரணமாக உலகம் எங்கும் தனிநாட்டுக் கோஷங்களே கேட்கின்றன. ஆயினும் பலருக்குத் தெரியாத விசயங்களில் ஒன்று, பிலிப்பைன்ஸிலும் முஸ்லீம் மக்கள் தனி நாடு ஒன்று கேட்டுப் போராடி வருவது!

சமீபத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளவர் குளோரியா அறோயா ஆகும்! இவர் பழைய ஜனாதிபதி எஸ்ராடா ஊழல் மூலம் விட்ட தவறுகளைச் சரி செய்து கொண்டி

**திக்கவயல்- சி.தர்மகுலசிங்கம்**

ருக்கிறார். இருப்பினும் பெப்ரவரி 20 ஆம் திகதி பிரிவினை கோரும் முஸ்லீம் கெரில்லாக்களுடன் போர் நிறுத்தம் ஒன்றினை அறிவித்திருக்கிறார்! முஸ்லீம் பிரிவினைவாதக் கெரில்லாக்களுடனும், நாட்டிற்குள் ஊடுருவித் தாக்கும் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுடனும் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்த உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. 1999 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் பிலிப்பைன்ஸ் நாட்டு அரசாங்கத்துடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர மறுத்தார்கள். ஏனெனில் அப்போதுதான் அமெரிக்காவுடன் பிலிப்பைன்ஸ் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்திருந்தது.

பிலிப்பைன்ஸில் தனிநாடு கோரிப் போராடிவரும் முஸ்லீம் கெரில்லாக்களுக்குப் பூரண மாநில சுயாட்சி ஒன்றினை வெகுவிரைவில் கொடுத்து விடுவார் என்றும், அந் நாட்டில் இன்னொரு நாடு உருவாவதை அவர் தடுப்பார் என்றும் எமக்குக் கிடைத்த விசேட செய்திகள் தெரிவித்தன

பிலிப்பைன்ஸ் போன்ற பெரிய நாடுகளில் கூட தனிநாட்டுக் கோரிக்கையை அடக்குவதற்காக பூரண மாநில சுயாட்சி கொடுக்கலாமா எனச் சிந்திக்கிறார்கள். இலங்கை சிறிய நாடாக இருந்தபோதிலும் சிறுபான்மை மக்களான தமிழ் பேசும் மக்களுக்குப் பூரண அதிகாரம் கொண்ட ஒரு மாநில சுயாட்சியைக் கூடக் கொடுக்க இதுவரை முன்வராமை விசாரிக்கத்தக்கது.

### மறக்கப்பட்ட சைப்ரஸ் தீவு! மறுதலித்துப் பார்க்கிறோம் நினைவூட்டுவதற்காக!

சைப்பிரஸ் தீவில் 1947ல் பிரவேசித்தது துருக்கிய இராணுவம்! அன்றைய தினம் துருக்கிய சைபிரஸ் பிரஜைகளை அத் தீவில் ஒடுக்கப்படுவதாகவும், நீதியை நிலை நாட்டுவதற்காகவே தாம் போகிறோம் எனவும் குறிப்பிட்டது. 1947 ஆம் ஆண்டில் அங்கு சென்ற இராணுவம் தீவின் வட புறத்தில் நிலை கொண்டுள்ளதே தவிர, தமது இனத்தவருக்காக இன்றும் ஒரு தனி நாட்டினை வகுத்துக் கொடுப்பதில் வெற்றியடையவில்லை! ஆயினும் துருக்கிய சைப்பிரஸ்காரர்களுக்காக ஆக்கிரமிக்கப்பட்ட சைப்பிரஸ் பகுதி, துருக்கிக் குடியரசின் வட பகுதி எனத் துருக்கியுடன் இணைக்கப்பட்ட பகுதி போல் பெயரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் துருக்கிக்கு ஒரு புதிய சிக்கலும் வந்து வாய்த்துள்ளது. ஐரோப்பிய யூரோ நாணய அமைப்பின் கீழ்த் துருக்கியைக் கொண்டு வருவதனால் (இப் பெயர் சூட்டப்பட்ட பிரதேசம்) துருக்கியின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாய் அங்கீரிக்கப்பட வேண்டும்!

ஒரு நாட்டுக்குள் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சைபிரஸ் தீவே **(Confederation)** அமைவதே துருக்கியின் மேலாதிக்க எண்ணம்! அதனை 26 ஆண்டுகளாக ஏன் தான் செயல்படுத்தாது இருக்கிறார்கள்? தமது இனத்தைக் காப்பாற்ற சைபிரஸ் தீவில் நுழைந்த துருக்கியர் **(Turks)** தமது இனத்துக்கான சுயநிர்ணயத் தீர்ப்பை வழங்காது தாமதிப்பது ஏன் என மேற்குலகும் இப்போது கேட்கத் தொடங்கியுள்ளது.

தீவின் பெரும்பான்மை இனம் கிரேக்கர்கள் **(Greeks)** என்பதும் குறிப்பிடத்தக்கது. இத் தீவின் ஆரம்பகால ஆட்சியாளர்கள் பிரிட்டிஸாரே என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### கௌத்த மாலாவின் உள்ளே என்ன நட்க்கிறது?

சமீபத்தில் இந்த நாட்டின் அல்பொன்சோ போட்டிலோ **(Albonso Portello)** என்பவர் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றார். இவர் இந் நாட்டின் பதவிக்கு வந்த பின்னர் அந்த நாட்டை ஆள்பவர் யார்? என்ற சந்தேகம் நாட்டு மக்களிடையே ஏற்பட்டு உள்ளது. போட்டிலோ அவர்கள் 36 வருடங்களாகப் போராடிய இடதுசாரி கெரில்லாக்களுடன் தொடர்புடையவர். 1996 ஆம் ஆண்டு வரை இந்த அமைப்பு செயற்பட்டது.

அதன் பின்பு இந்த அமைப்பு கௌதமாலா குடியரசு முன்னணியாக மாறியது. **(Guatemalar Republic Front)** இந்தக் கட்சி எ.ஃபிறேயின் றியோஸ்மொன்ற் **(Efrain Rios Montt)** என்பவரால் இயக்கப்படுவது. இவர் ஒரு பயங்கரமான போர்ச்சர்வாதிகாரியாக இருந்தவர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இராணுவ சர்வாதிகாரம் ஒன்றினை அழிக்கும் நோக்குடன் சிவிலியன் பொலிஸ் அமைக்கப்பட்டது.

இந்த நிலை நீடிக்க வேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள். ஏனெனில் இங்கு நடைபெற்ற சிவில் யுத்தத்தினால் இரண்டு இலட்சம் பேர் ஏற்கனவே இறந்துவிட்டார்கள்!

சிவிலியன் பொலிஸ் பாதுகாப்பு முறை பேணப்படல் வேண்டும் என்பது பொது மக்கள் வேணவா.

(புதிய அரசு இந்த வாக்குறுதியை மறந்து விடுமா என மக்கள் தவிக்கிறார்கள்.)

இதனைவிட வரிகள் இந் நாட்டு அரசினால் 10% அதிகரிக்கப்பட உள்ளது. இதனை விட சிவில் யுத்த காலத்தில் கொல்லப்பட்ட (1998) ஜுஆன் கெரடி **(Juan Geradi)** என்ற மதகுரு கொல்லப்பட்டமை சம்பந்தமாகப் புதிய ஆட்சியாளர் விசாரணை செய்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அதிகரித்துள்ளது.



சமாதானம் வரவேண்டும் என வெள்ளைப் புறாவுடன் இருக்கும் கௌதமாலா மக்கள்! (புறாக்கள் மாத்திரம் சமாதானம் கொண்டு வரும் எனில் எத்தனையோ நாடுகளில் சாம்பல் மேடு பூத்திருக்காது)

# கோரகல்லி மடுவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப் பற்று (வாழைச்சேனை) பிரதேசத்திலுள்ள கோரகல்லிமடுவில் தடாகம் பெண்கள் அமைப்பினால் (8.3.2001) அன்று காலை 10மணிக்கு மகளிர் தினம் எழுச்சி நிகழ்வு இடம் பெற்றது. தடாகம் இணைப்பாளர் செல்வி. து.சந்திரா தலைமையில் இடம் பெற்ற இந்த எழுச்சி நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேசத்திலுள்ள பல கிராமங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், அடக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிராகவும் பெண்களின் உரிமைகள், சமத்துவம் என்பன மதிக்கப்பட வேண்டும் என்பவற்றுடன் தமிழர்களின் உரிமை சுய நிர்ணய உரிமை, அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி போருக்கு முடிவுகாண வேண்டும் என்பதையும் இந்நிகழ்வில் வலியுறுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது.

இவற்றை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ள மகஜர் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி, மகளிர் விவகார அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி, வைப்பதற்காக இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெண்களிடம் கையெழுத்தும் பெறப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் நிகழ்வு நடைபெறும் மேடையைச் சுற்றியும் பல வாசகங்கள் அடங்கிய பதாதைகள் கட்டப்பட்டிருந்தன. அதில் பின்வரும் வாசகங்கள் அடங்கிய பதாதைகள் கட்டப்பட்டிருந்தன.

அரசே சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்களை விடுதலை செய். மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டும். சந்தேகம் என்ற பெயரில் பெண்களைக் கைது செய்யாதே. அறிவினில் ஆணுக்குப் பெண் நிகரென்று கூறுவோம். பெண்களுக்கு எதிரான அரசியல் வன்முறைகளை நிறுத்து. பெண்களே நாம் என்ன பகடைக்காய்களா? வடக்குக் கிழக்கு எமது பாரம்பரிய தாயகம். தமிழர்களின் அபிலாசை சுய நிர்ணய உரிமை. நாம் ஒரு தேசிய இனம் என்பதை உறுதி செய்வோம். விழித்துவிடு பெண்ணினமே, துணிந்து எழு. அரசே போரை நிறுத்திப் புலிகளுடன் பேசு. அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் சமமே. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்.




## ''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்''? வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் ஜோசப் எம்.பி.

(நமது நிருபர்)

நான் இங்கு வந்திருந்த நேரம் தொடக்கம் அவதானித்துக் கொண்டிருந்தேன் தொடர்ந்து ''பாரதியின்'' பாடல்களே ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதில் என்னை மிகவும் கவர்ந்தப்பாடல் ''என்று தணியும் இந்த் சுதந்திர தாகம்'' என்ற பாடல் தான். தமிழர்களை அடிமைப்படுத்தி வாழ வைத்த சிங்கள அரசை எதிர்த்து அன்று தந்தை செல்வா தொடங்கிய போராட்டம் இன்று ஆயுத போராட்டமாக பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் ஜனநாயக வழிக்கு திரும்பிய போராளிகளில் ஒரு குழு மாத்திரம் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தது. அதனை தடை செய்ய உலக நாடுகள் முழுவதிலும் பிரச்சாரம் செய்து திரிகின்றது இலங்கை அரசு. இங்கு நடைபெற்ற போட்டிகளிலே மூன்று மாணவர்களின் கண்களை கட்டி விட்டு தடை தாண்ட விட்டார்கள். அதே போன்று தான் பிரித்தானிய அரசும் நடந்து கொண்டுள்ளது. என்னதான் தடைசெய்தாலும் நாங்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விரும்புகிறோம் என்பதை உணர்த்த தொடர்ந்து மூன்று மாதமாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு மட்/விவேகானந்த மகளிர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தத்தினை இலங்கை அரசோ பலவீனம் என கூறுகின்றது. அவர்கள் எப்போதும் பலமாகத்தான் உள்ளனர் என்பதை அரசு உணர்ந்தும் இப்படி கூறுவது வேடிக்கையாய் உள்ளது. இப்போது அரசு பொறியில் மாட்டிக் கொண்டு முழிக்கின்றது. உதவி வழங்கும் நாடுகளோ! பிரச்சினையை தீருங்கள் நிதி தருகிறோம் என்று கூறுவதால் எப்படியாவது புலிகளோடு அரசு பேசியே ஆக வேண்டும்.

நான் வெளியில் சில மாதங்கள் சென்றபடியால் என்னை நாட்டை விட்டு ஓடிவிட்டதாக கூறியிருக்கின்றார்கள். இதனை கூறியவர் வேறு யாருமல்ல என்னோடு ஒரே கட்சியில், ஒரே சின்னத்தில் போட்டியிட்டவர் தான். இதை நினைக்கும் போது மிக மனவேதனையாயுள்ளது. தமிழருக்குள் இப்படியான பிரிவுகள் இருந்தால் எப்படி விடிவு வரும். எனவே எமக்குள் ஒற்றுமை எப்போது வருகின்றதோ அன்றுதான் எமக்கு விடிவுகாலம்.

இவ்வைபவத்தில் ஸ்ரீமத் சுவாமி யுத்தாத்மானந்த ஜீ மகராஜ், மின்சார சபை பொறியியலாளர் கே.பரம்சோதி உடற்கல்விப் பணிப்பாளர் எம்.குருகுலசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினர்.

## இந்திய மண்ணிலும் ஆஸ்திரேலியா சாதனை

(புதுடெல்லி),

ஆஸ்திரேலியா-போர்டு லெவன் அணிகள் மோதும் 3 நாள் கிரிக்கெட் போட்டி புது டெல்லியில் இன்று தொடங்குகிறது.


ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சாதனை இந்திய மண்ணிலும் தொடர்ந்து நீடிக்கிறது. மும்பையில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை 3 நாளில் தோற்கடித்து, புதிய நம்பிக்கையுடன் அடுத்த டெஸ்ட் மோதலுக்காக ஆஸ்திரேலியா காத்திருக்கிறது. கொல்கத்தாவில் இன்னும் 5 நாட்களில் 2-வது டெஸ்ட் தொடங்க உள்ள நிலையில் தொடங்க தலைவர் அணிக்கு எதிரான 3 நாள் போட்டி இன்று முதல் புதுடெல்லியில் நடக்கிறது. மும்பை டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்சையும் சேர்த்து இரட்டை இலக்க ஸ்கோர் எட்டாத காப்டன் கங்குலி பயிற்சி எடுக்க வேண்டும் என்ற நோக்கில் 3 நாள் போட்டியில் களம் இறங்குகிறார். காய மடைந்த ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் இன்றைய ஆட்டத்தில் களம் இறங்கவில்லை.


### ஆஸிக்கு வாய்ப்பு

32 ஆண்டுகளாக இந்தியாவில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற போராடும் ஆஸ்திரேலிய அணிக்கு இந்த முறை நல்ல வாய்ப்பு இருப்பதாக தற்போது கணிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவில் நடத்தப்படும் அதிகாரப்பூர்வ பெட்டிங்கிலும் தற்போது இந்திய அணிக்கு மதிப்பு குறைந்துவிட்டது. முன்னதாக நடந்த 3 நாள் போட்டியில் 5 விக்கெட் கைப்பற்றிய ஒரே காரணத்துக்காக மும்பை டெஸ்ட் போட்டியில் இடம்பெற்ற சங்வி பெரிதாக எதையும் சாதிக்க வில்லை. பகுதிநேர பந்துவீச்சாளரை விட மோசமாகத்தான் சங்வியின் பவுலிங் இருந்தது.

### வார்னே-மார்க்வாக் ஓய்வு

கொல்கத்தா டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர்கள் மாற்றம் செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 8 ஆண்டுகளாக தேசிய அணியில் இடம்பெறாத கிர்வானி மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். மும்பையில் வாய்ப்பு பெறாத கிர்வானி கொல்கத்தா போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு சவால் விடுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இன்றைய போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியில் மார்க்வாக், வார்னே மற்றும் மெக்ராத் ஆகிய முன்னணி வீரர்கள் இடம்பெற மாட்டார்கள் என்று ஸ்டீவ்வாக் கூறினார். கோலின் மில்லர் மற்றும் காஸ்பரோவிட்ச் ஆகியோர் களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட உள்ளது. புதிய விக்கெட் கீப்பர் பிராட் ஹேடின் ஆஸ்திரேலிய அணியுடன் இணைந்தார்.





மட்/சிங்காரத்தோப்பு சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஏறாவூர் பற்று -02 கோட்டக்கல்வி அதிகாரி இ.வேலுப்பிள்ளை குத்து விளக்கேற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் கு.சண்முகம் அவர்கள் நிற்பதையும் காணலாம்.

பிரதம அதிதி இ.வேலுப்பிள்ளை வெற்றி பெற்ற மாணவனுக்கு பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### விவேகானந்தா இல்ல விளையாட்டுப் போட்டி ஒரு முன்மாதிரி

6.03-2001 அன்று இடம் பெற்ற இல்ல விளையாட்டு விழாவினை ஒழுங்கமைப்பும் மாணவர்களின் திறமைகளும் பலராலும் பாராட்டப்பட்டது.

பாடசாலை விளையாட்டு விழாக்களில் ஒலிபெருக்கியில் அர்த்தமற்ற விரசமான சினிமாப் பாடல்கள் முக்கி முனகுவதை கேட்டு வந்த எமக்கு, இவ்விழாவில் ஆரம்பம் முதல் இறுதி வரை பாரதி பாடல்களும், மாணவர் செல்வங்களை சமூகத்தின் பால் அக்கறை கொள்ள வைக்கும் கருத்தாழமிக்க பாடல்களும் ஒலிபரப்பப்பட்டது பாராட்டுக் குரியதே. ஏனைய பாடசாலைகளும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட விழாக்களில் டப்பாங்கூத்து பாடல்களை தவிர்த்து விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம் போல் கருத்தாளம் உள்ள பாடல்களை ஒலிபெருக்கி மாணவர்களின் மனதில் நல்ல எண்ணங்களை விதைக்க முன்வரவேண்டும் என்று தினக்கதிர் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

த.தங்கத்துரை
கல்லடி

## வாசகர் நெஞ்சம்

### ''ஏன் இவர்கள் இப்படி'' என்பதற்கு சுகாதார வைத்திய அதிகாரி விளக்கம்

தங்களின் 06.03.2001ம் திகதி செவ்வாய்க்கிழமை தினக்கதிர் பத்திரிகையில் 07ம் பக்கத்தில் வாசகர் நெஞ்சம் பகுதியில் ''ஏன் இவர்கள் இப்படி'' என்னும் தலைப்பில் எழுவான், களுவாஞ்சிகுடி, என்ற வாசகரால் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட கடிதம் முற்றிலும் தவறானதாகவும், உத்தியோகத்தர்கட்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள விற்பனைசாலைகளிலும், உணவு தயாரிக்கும் நிலையங்களிலும் மனித பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும் கட்டுப்படுத்துவதற்காக 1980ம் ஆண்டின் 26ம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் சகல உணவு தயாரிப்பு, விற்பனை, களஞ்சியப்படுத்தும் நிலையங்களை பரிசோதனைக்கு உட்படுத்தி அந்நிலையங்களிலிருந்த மனித நுகர்விற்கு ஒவ்வாத, திகதி காலாவதியான, உரிய முறையில் சுட்டுத்துண்டு இடப்படாது பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், மற்றும் அயடின் கலக்கப்பட்ட உப்பு ஒழுங்குவிதிகளுக்கு முரணான முறையில் பொதியிடப்பட்ட உப்பு பக்கெற்றுகளும் கைப்பற்றப்பட்டு உரிமையாளர்களின் சம்மதம் பெறப்பட்டு அழிக்கப்பட்டன. இச்செய்திகள் பத்திரிகையிலும் பிரசுரமானது

இருந்தும் மேற்படி 06.03.2001 அன்று வெளியிடப்பட்ட கடிதமானது எமது உத்தியோகத்தர்களை தங்களது கடமையினை மிக நேர்த்தியாகவும், நேர்மையாகவும் செய்து மக்களின் சுகநலத்தை மேம்படுத்துவதை தடுப்பதற்காக வேண்டுமென்றே திட்டமிட்டு அலுவலர்களை கொச்சைப்படுத்துமுகமாக எழுதப்பட்டுள்ளது. பொது மக்களின் நலனை முன்னிட்டு மேற்படி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை விரும்பாத சிலரில் ஒருவரால் மேற்படி கடிதம் எழுதப்பட்டுள்ளதாக கருத இடமுண்டு. எமது அலுவலக உத்தியோகத்தர்கள் எவரும் மேற்படி வாசகர் குறிப்பிட்டுள்ள எவ்வித செயல்களிலும் ஈடுபடவில்லையென்று உறுதியாக தெரிவிக்கின்றேன்.

எனவே மேற்படி வாசகர் திரிவுபடுத்தி ஆதாரமற்ற செய்திகளை இனிமேலும் பத்திரிகைகளுக்கு எழுதுவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.ரகுராம்
சுகாதார வைத்திய அதிகாரி
களுவாஞ்சிகுடி

### வாகனத்தில் மரக்கறி வியாபாரமும் பொன்னாங்கண்ணி தடையும்

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளில் வாகனத்தில் மரக்கறி எடுத்து சென்று பல இடங்களிலும் வியாபாரம் செய்கின்றார்கள். இதனால் மட்/பிரதான பொதுச்சந்தையில் பல நூற்றுக்கணக்கான வியாபாரிகள் நிரந்தரமாக வியாபாரம் செய்து வருவதோடு, மாநகர சபைக்கு வரிப்பணமாக நாளாந்தம் ஆயிரக்கணக்கான ரூபா வரியாக செலுத்தப்படுகின்றது. இது இப்படியிருக்க வாகனத்தில் பலவிடங்களிலும் மரக்கறி வியாபாரம் செய்கின்ற காரணத்தினால், இப்போதுச் சந்தையில் அன்றாடம் வியாபாரம் செய்கின்ற வியாபாரிகள் தொழில் ரீதியாக பெரும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

மேலும் மட்/மாவட்டத்தில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தம்புள்ளையில் இருந்து பொன்னாங்கண்ணிக் கீரையை விற்பனை செய்யக் கூடாது என்று சுகாதார பரிசோதகர்கள் தடைவிதித்து அப்பொன்னாங்கண்ணிக் கீரையை பறிமுதல் செய்து எடுத்துச் செல்கின்றார்கள். இப்பொன்னாங்கண்ணிக்கீரை வியாபார தடை விதிப்பு பிரச்சினை ஒரு வருடத்துக்கு முன்பு இங்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. தற்பொழுதும் இத்தடை அமுலில் இருக்கின்றது. இத்தடை விதிப்பு பிரச்சினையால் இங்கு வியாபாரம் செய்கின்ற 25 பெண் வியாபாரிகள் தொழில் ரீதியாக பாதிக்கப்படுகின்றார்கள்.

மட்/மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொன்னாங்கண்ணிக்கீரை மாரிகாலங்களில் மட்டுமே இங்கு கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஏனைய காலங்களில் தம்புள்ளை பொன்னாங்கண்ணி கீரை மட்டும் தான் விற்பனை செய்யக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே இப்பொன்னாங்கண்ணி கீரையை மட்/பிரதான பொதுச்சந்தையில் மட்டும் சுகாதார பரிசோதகர் தடைவிதிப்பது என்ன காரணம் என்பது வியாபாரிகளாகிய எங்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது.

மேலும் இலங்கை முழுவதும் இப்பொன்னாங்கண்ணிக்கீரை விற்பனை செய்யப்படுகின்றது. அத்தோடு பொது மக்களுக்கு மலிவான விலையிலும், சத்துள்ள உணவாகவும் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இது தொடர்பாக மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

வீ.தர்மலிங்கம்
மரக்கறி வியாபாரிகள்
வர்த்தக சங்கம்
பொது சந்தை
மட்டக்களப்பு

# விடுதலைப் புலிகள் மீதான தடை பேச்சுக்குக் குந்தகமாகக் கூடாது!

## இரு தரப்பாரிடமும் பிரிட்டன் வற்புறுத்து

(நமது விஷேட நிருபர்)

**பிரிட்டனில் விடுதலைப் புலிகள் அமைப்புத் தடைசெய்யப்பட்டிருப்பது எதிர்பாராத ஒரு விடயமாகும், அதைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளில் முறிவோ அன்றி முட்டுக்கட்டைகளோ ஏற்பட இரு தரப்பாரும் இடமளித்துவிடக்கூடாது.**

இவ்வாறு இலங்கை அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் பிரிட்டிஷ் அரசு ஆணித்தரமாகக் கூறியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. உள்நாட்டு ஒழுக்கம், கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதற்காக பிரிட்டனில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் அமைப் பும் தடைசெய்யப்படுவது எதிர்பாராத ஒரு விடயமாகும். அந்த விடயத்தைப் பெரிது படுத்தக்கூடாது. சமாதானப் பேச்சுக்களுக்குத் தற்சமயம் எடுக்கப்படும் முன்முயற்சிகளை இருதரப்பும் கைவிடக்கூடாது. அவற்றைக் குழப்ப முனையவும் கூடாது என்று பிரிட்டன் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளதாகக் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை அரசுப் பிரிதிநிதியைக் கொழும்பில் உள்ள தூதரகத்துக்கு அழைத்தும் - விடுதலைப் புலிகளின் பிரதிநிதியை லண்டனில் உள்ள தமது அலுவலகத்துக்கு அழைத்தும் -இந்தக் கோரிக்கையை பிரிட்டிஷ் அதிகாரிகள் விடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -21 அமைப்புக்களைப் பயங்கரவாத அமைப்புக்களாகப் பிரகடனம் செய்யும் பட்டியல் இறுதியானது அல்ல என்றும் - பொலீஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் - அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் - இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் -இந்தப் பட்டியலில் உள்ள ஓா் இயக்கத்தை நீக்கவோ அல்லது புதிதாக வேறு இயக்கத்தைச் சேர்க்கவோ முடியும் என்றும் - பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அதிகாரியான சாள்ஸ் கிளாக் தெரிவித்துள்ளார். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 21 அமைப்புக்களையும் தடைசெய்யும் சட்டம் உடனடியாக அமுலுக்கு வரமாட்டா என்றும் -இரு சபைகளிலும் விவாதிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு உட்துறை அமைச்சா் கையொப்பம் வைத்த பின்னரே அது அமுலுக்கு வரும் என்றும் - அந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு நான்கு வாரத்தில் இருந்து ஆறு வாரங்கள் வரை செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

## "குருதி மண்" வெளியிடப்பட்டது.

(வவுனியா நிருபர்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் முழு நிலாக் கருத்தாடல்கள் 47வது நிகழ்வை நேற்று நடாத்தியது.

கந்தையா ஸ்ரீ-கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலையைச் சேர்ந்த கனகசபை தேவகடாட்சம் எழுதிய குருதிமண் சிறுகதைத் தொகுதி விமர்சனத்துக்கு எடுக்கப்பட்டது. நூலுக்கான விமர்சனத்தை தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.ஜெயச்சந்திரன் திருமதி வெண்ணிலா, விஜயலக்ஸ்மன் விரிவுரையாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் கவிதைகள் காலாண்டு சஞ்சிகை நிலம் சஞ்சிகையும் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் இதற்கான விமர்சன உரையை கனகரவி மேற்கொண்டமை முக்கியவிடயமாகும்.

## பிரதமர் பாகிஸ்தான் செல்கிறார்

(நமது நிருபர்)

ஆப்கானிஸ்தானில் புராதன புத்தர் சிலைகளை அழிவிலிருந்து தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்காகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இன்று சனிக்கிழமை பாகிஸ்தான் செல்லவுள்ளார்.பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கும் நாடு. எனவே அந்த நாட்டின் மூலம் புராதன புத்தர் சிலைகளைப் பாதுகாக்கலாம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு - என்று பிரதமர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். இந்த விடயத்தில் ஆப்கானிஸ் தானுக்கு எதிராக ஐ.நா.சபையில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க இலங்கை அரசாங்கம் தயாராகவு ள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## வரணியில் மூன்று இளைஞர்களை காணவில்லை

(யாழ் நிருபர்)

வரணி இயற்றாலையைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கடந்த 6 ஆம் திகதி முதல் காணாமற்போய் விட்டதாக உறவினர்கள் பருத்தித்துறையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறையிட்டிருக்கின்றனர். தங்கராசா மகேஸ்வரன் (வயது 21), நவரத்தினராசா ஜெயராசா (வயது 24), கந்தசாமி ஸ்ரீகாந்தன் (வயது 24) ஆகிய மூவருமே காணாமற் போயுள்ளனர். இவர்களில் தங்கராசா மகேஸ்வரன் என்பவர் அன்றைய தினம் வீதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகவும் -ஏனைய இருவரும் தோட்டத்துக்கு நீர்

### உறவினர்கள் முறையீடு

இறைத்துக்கொண்டிருந்த சமயம் கைதுசெய்யப்பட்டதாகவும் - தமக்குத் தெரியவந்ததாக உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இவர்களைக் கைது செய்யவில்லையென்று அப்பிரதேசப் படைமுகாமில் கூறப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதற்காகப் பருத்தித்துறைப் பிரதேசசபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் பருத்தித்துறை அமைப்பாளருமான றங்கேஸ்வரன் அமைச்சர் டக்ள்ஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## புலிகளின் ஆயுதத்தொழில் நுட்பத்தில் வடகொரியத் தொடர்பு உண்டா?

### பாதுகாப்புச் சஞ்சிகையில் தகவல்

(நமது நிருபர்)

படைகளுக்கு எதிரான தாக்குதலுக்கு கொரிய நாட்டுத் தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நவீன பீரங்கி பொருத்தப்பட்ட படகுகளை கடற்புலிகள் பயன்படுத்தியிருப்பது அறியவந்துள்ளதாக 'ஜேன்ஸ் இன்ரலிஜென்ஸ் றிவியு' என்ற பாதுகாப்புச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி கடற்படையின் பயணக் கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.அந்தத் தாக்குதல் தொடர்பாக வெளியிடப்பட்ட வீடியோப் படத்தில் கடற் புலிகளின் தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை நுட்பமாக ஆய்வுசெய்தபோதே மேற்படி தகவல் தெரியவந்திருப்பதாக அந்த இராணுவச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.கடற்புலிகள் அந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்திய படகும், அதில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கியும் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ரகங்களை ஒத்தவையாக இருக்கின்றன. அந்த வீடியோப் படத்தின்படி கடற் புலிகள் 107 மில்லி மீற்றர் 'கட்ஜுஷா' (Katyusha) ரக றொக்கெட்டுக்களைப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. இவை சீனத் தயாரிப்பான 63 - 107 மில்லிமீற்றர் லோஞ்சாகள் மூலமே ஏவப்படக் கூடியவை என நம்பப்படுகிறது. சீனத் தனிநபர் ஒரு ஏந்திச் செல்லக் கூடிய ஒரு குழல் லோஞ்சர்களையே தயாரிப்பதுண்டு. வடகொரியாவே இரட்டைக் குழல் லோஞ்சர்களைத் தயாரிக்கிறது. இது மிகவும் அரிதான ஆயுதமாகும். இந்த லோஞ்சர் 18 கிலோகிராம் எடையுள்ளது. 8 கிலோ மீற்றர் தூரத்தைப் பாய்ந்து செல்லக் கூடியது - என்று 'ஜோன்ஸ் இன்ரெலியன்ஸ் றிவியு' தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் மூன்று இளைஞர்கள் கைது!

(வுவனியா நிருபர்)

வவுனியா பூந்தோட்டத்தில் இராணுவத்தினரால் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மரியசெங்கோல் செபஸ்டியன் கடந்த 6ம்திகதி பிடித்துச் செல்லப்பட்டுள்ளார். ஜோசப் ஜோன் (19) 7ம் திகதி பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக ஜோசப் ஜோனின் தந்தையான செபஸ்டியன் ஜோசப்(47)கூறுகையில் தங்களுடைய மகனை 7ம் திகதி தாங்கள் இருந்த எட்டாம் யுனிட்முகாமுக்கு வந்த ஆயுததாரிகள் இரவு 11 மணியளவில் தங்கள் மகனைப் பிடித்துச் சென்றதாகவும் அப்போது முகாமின் பாது காப்பிற்கு என இருந்த பொலிஸாரும் யார் கொண்டு செல்கிறார்கள். ஏன் கொண்டு செல்லுகிறார்கள். என விசாரிக்காமல் கண்டும் காணாமல் இருந்து விட்டனர்.

கொண்டு செல்லப்பபட்டவர்கள் இன்று வரை எங்கிருக்கிறார்கள் என்ற விபரம் எதுவும் தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, அனைத்துலக செஞ்சிலுவைச் குழு போன்ற அமைப்புகளிடம் முறையிட்ட போதும் அவர்கள் இதுவரை எங்குள்ளார்கள் என்ற விபரம் எதையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை வவுனியா பூந்தோட்ட இராணுவத்தினர் 5 பேரை கைது செய்துள்ளதாகவும் அவர்க ளிடமிருந்து தானியங்கித் துப்பாக் கிகள், துப்பாக்கி ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## 'தினக்கதிர்' ஓராண்டு நிறைவையொட்டி வாசகர்களுக்கான போட்டிகள்.

1. சிறுகதைப் போட்டி:-

சமூக மேம்பாட்டை கருப்பொருளாகக் கொண்டு 1500 சொற்களுக்கு குறையாமல் தமது சொந்த ஆக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.

2. கவிதைப் போட்டி:-

தலைப்பு:- உபதேசம்,மேற் கூறிய தலைப்பில் இருபது வரிகளில் மட்டும் எழுதப்பட வேண்டும்.

3. நிபந்தனைகள்:-

தினக்கதிர் நிறுவனத்தில் கடமை புரிபவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இப் போட்டிகளில் பங்குபற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது.

'தினக்கதிர்' வாசக நெஞ்சங்கள் அனைவரும் வயது வித்தியாசங்கள் இன்றி இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

பரிசில்கள்:-பெறுமதியானப் பரிசில்களும்,சான்றிதழ்களும் வழங்கப்படும்.

முடிவுத் திகதி:-30.03.2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு

ஓராண்டு வாசகர் போட்டி
'தினக்கதிர்'
த.பெ.இ.6
மட்டக்களப்பு.எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*' வெற்றியீட்டிய வாசகர்களின் விபரம் தினக்கதிரில் பிரசுரிக்கப்படும்*

*' வெற்றியீட்டிய சிறுகதை.கவிதை வெளியிடப்படும்.*

*' வெற்றியீட்டிவர்களுக்கான பரிசில்கள் தினக்கதிர் ஆண்டு விழாவில் வழங்கப்படும்.*

## கலாசார மண்டப..

விட்டனர். மண்ட பத்துக்குள் அமர்ந்து இருக்க கூட அவர்கள் அனுமதிக்கவில்லை.

சில நிமிடங்கள் கழித்து ஹிஸ்புல்லா வந்த பின் கேட்டு விட்டு உங்களை உள்ளே விடலாம் என்று வாசலில் நின்று கடமை புரிந்தவர்கள் தெரிவித்தார்கள். இதன் பின் நமது செய்தி யாளர்கள் அங்கே நிற்பார்களா?

இதில் உள்ளே இருந்து 'உத்தரவு'பிறப்பித்த கறுப்பு ஆடு எது,யார்? இவர்கள் அமைச்சர் பேரியலுக்கு எதிராக சதி செய்கிறார்களா?அல்ஹாஜ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக செயற்படுகிறார்களா? அமைச்சரின் வருகை நிகழ்ச்சிக்கு அயராது உழைத்த வர்கள் இது பற்றி சிந்தித்து ஆராய்வதும் இனி இப்படி ஒரு சம்பவம் நடவாமல் பார்த்துக் கொள்ளவதும் நல்லது.

## வரவு செலவு..........

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு போர் முடிவுக்கு வரும்வரை அரசு சமர்ப்பிக்கும் வரவு செலவுத்திட்ட ங்களுக்கு எதிராக ரெலோ கட்சி வாக்களிக்கும்.

எனவே தற்போததைய வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படும் பட்சத்தில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தே வாக்களிக்கவுள்ளனர்.

இதேவேளை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன் தெரிவிக்கையில்

பாதுகாப்பு செலவிற்கே கூடிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது மக்களின் பணத்தினை இது வீணடிக்கிறது.இதே சமயம் விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தை அறிவித்து சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டிருக்கும் நிலையில் கூட அரசு போருக்கான செலவினை அதிகரித்துள்ளது. இதனை உற்றுப் பார்த்தால் போரை விரிவுபடுத்துவதே அரசின் நோக்கமாக உள்ளமை தெளிவாகின்றது. எனவே அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் எதிர்த்தே வாக்களிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் சஸ்ரான் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.